**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,LLM.,B.Sc.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி.
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை
(2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 29 ம் நாள்)

**ஜீவனாம்ச வழக்கு எண்.27/2025**

**CNR.No.TNSV160013852025**

விஜிதா (வயது 46/25)
க/பெ.ராஜ்குமார்,
1/57, நெடுவயல் ரோடு,
எஸ். புதூர் கிராமம்,
சிங்கம்புணரி தாலுகா,
சிவகங்கை மாவட்டம். ..... மனுதாரர்

/எதிர்/

ராஜ்குமார் (வயது 51/25)
த/பெ.குகன்,
420, வள்ளியகம்,
மகிபாலன்பட்டி,
திருப்பத்தூர் தாலுகா,
சிவகங்கை மாவட்டம். ..... எதிர்மனுதாரர்

இவ்வழக்கு 19.09.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் எம்.சி. எண்:27/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.பழனிசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினால் 26.02.2026 ம் தேதி எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக உத்தரவிடப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்து 12.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர் தரப்பு வாதம், சாட்சியம்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.13 07:34:21 +0530

மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்....

**உத்தரவு**

1).இம்மனுவானது கு.வி.மு.ச பிரிவு 125ன் கீழ் மனுதாரருக்கு ஜீவனாம்சமாக மாதம் ரூ.1,00,000/- எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**:-

2(1).மனுதாரர் தரப்பில், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 07.02.2011ம் தேதி பெரியோர்களில் நிச்சயிக்கப்பட்டு சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகா, எஸ்.புதூர் கிராமத்தில் வைத்து மணமகள் இல்லத்தில் வைத்து 100 பவுனுக்கு மேல் தங்க நகைகள், 5 கிலோ வெள்ளி சாமான்கள் மற்றும் ரூபாய் பத்து லட்சம் மதிப்பிலான சீர்வரிசை சாமான்கள் ஆகியவைகள் மனுதாரருக்கு வழங்கப்பட்டு, திருமணத்திற்காக சுமார் ரூ.60,00,000/- வரை மனுதார்களால் செலவு செய்யப்பட்டது.

2(2) திருமணத்திற்கு பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரருடன் இல்லறம் நடத்துவதற்காக சிங்கப்பூர் சென்று எதிர்மனுதாரரின் தாய், தந்தை மற்றும் அவரது சகோதரர் குடும்பத்தினருடன் மனுதார் கூட்டு குடும்பமாக வசித்து வந்த போது மனுதாரரை வேலைகாரி போல் நடத்தி வந்துள்ளனர். எதிர்மனுதாரர் மனுதாரரை மற்றவர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியது மட்டுமின்றி குடும்பத்தில் உள்ள எல்லோரும் சேர்ந்து பலமுறை மனுதாரரை அடித்தும் சாப்பாடு கூட தராமல் துன்புறுத்தியதால் இந்தியாவில் எங்காவது வேலை பார்த்து பிழைத்து கொள்கிறேன் என்று தனது பெற்றோரிடம் பலமுறை கூறியுள்ளார். எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் குழந்தை இல்லை என்பதால் மனுதாரர் மட்டும் தனியாக மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுள்ளார். எதிர்மனுதாரர் தனது தாயாரின் பேச்சை கேட்டு மருத்துவ சிகிச்சை வர மறுத்துவிட்டார்.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.13 07:34:33 +0530

மருத்துவர் மனுதாரரை சோதனை செய்து விட்டு எவ்வித பிரச்சனையும் இல்லை என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். ஒருமுறை மனுதாரருக்கு கர்ப்பம் ஏற்பட்டு சிங்கப்பூரில் இருந்து மதுரை வரவழைத்து மேற்படி கர்ப்பம் டியுப்-ல் உற்பத்தியாகி இருப்பதாக கூறியதால் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.

2(3) எதிர்மனுதாரர் தனது தவறான நடவடிக்கைகளையும், ஆணவ போக்கையும் மறைப்பதற்காக மனுதாரர் எதிர்மனுதாரர் சகோதரர் குடும்பத்துடன் யாதொரு நியாயமான காரணமும் இன்றி சண்டையிட்டதாகவும், எதிர்மனுதாரர் அவரது சகோதரர் குடும்பத்துடன் பேசினால் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டியதாக பொய்யாக அவரது குடும்பத்தினரிடம் கூறியுள்ளார்.

2(4) மனுதாரரின் சகோதரியான அபர்ணா B.E.M.B.A படித்துவீட்டு சென்னை ராயல் பேங்க் ஆப் ஸ்காட்லாந்த் வங்கியில் Business Analyst ஆக 6 ஆண்டுகள் வேலை பார்த்து வந்தார். அவரது வருமானத்தில் இருந்து மனுதாரரின் பெற்றோருக்கும் மருத்துவ செலவிற்கும் பணம் கொடுத்து வந்தார். மேற்படி அபர்ணாவிற்கு திருமணம் முடிந்தவுடன் அமெரிக்கா செல்ல இருந்ததால் மனுதாரரின் பெற்றோர் குடும்பத்தின் செலவில் சிங்கப்பூர் செல்ல ஏற்பாடு செய்தனர். மனுதாரர் கேட்டு கொண்டதற்கிணங்க எதிர்மனுதார் அவருக்கு நகைகள் வாங்கி கொடுத்ததாகவும், ரூபாய் நான்கு லட்சம் வரை செலவு செய்ததாகவும் எதிர்மனுதார் வெளியில் கூறி வந்தார்.

2(5) மனுதாரரின் மற்றொரு சகோதரியான லாவண்யா என்பவர் கர்நாடகா மாநிலத்தில் காமசமுத்திரத்தில் இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் நடத்தி வரும் நிலையில், லாவண்யா குடும்பத்தினருக்கு எதிர்மனுதாரர் தொழில் நடத்த 2016ம் ஆண்டு மே மாதம் 12ம் தேதி ரூ.12,00,000/-மும், 2018 ஜுலை மாதம் தங்க நகைகள் கொடுத்த வகையில் ரூ.1,00,000/- கொடுத்ததாக பொய்யாக பிரஸ்தாபித்து வருகிறார்.

2(6) மனுதாரரின் பெற்றோர் எதிர்மனுதாரரிடம் கடன் தரும்படி கேட்டு அதனை திருப்பி தந்து விடுவதாக மனுதாரரின் பெற்றோர் உறுதியளித்ததால் 3

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.13 07:34:41 +0530

முறை ரூ.3,00,000/- கடன் கொடுத்ததாகவும், மனுதாரரின் பெற்றோருக்கு ரூ.75,000/-க்கு எமகா ஸ்கூட்டர் வாங்கி கொடுத்ததாகவும் பிரச்சனை செய்தார்.

2(7) மனுதாரரின் சகோதரர் பிரபு என்பவர் பிடெக் படித்து விட்டு அமெரிக்கா செல்ல விசா கிடைத்த போதிலும் அங்கு செல்லாமல் கோவையில் பெரிய அளவில் தொழில் நடத்தி இந்தியாவின் ராக்கெட் மற்றும் ஏவுகனைகளுக்கு உதிரி பாகங்கள் செய்து கொடுத்து தொழில் செய்து வருகிறார். அவருக்கு தொழில் செய்ய எதிர்மனுதாரர் பணம் கொடுத்ததாக கூறியிருப்பதும், மனுதாரரின் பெற்றோர் பயன்படுத்தும் எமகா ஸ்கூட்டர் எதிர்மனுதார் வாங்கி கொடுத்ததாக கூறி எதிர்மனுதாரர் மனுதார் மற்றும் அவரது தகப்பனார் மீது திருப்பத்தூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்:5/2020 வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2(8) மனுதாரரின் சகோதரரின் திருமணத்தில் கலந்து கொள்ள இயலாத எதிர்மனுதாரர் கடந்த 31.05.2019ம் தேதி மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு வந்திருந்த போது எதிர்மனுதாரர் கடனாக கொடுத்ததாக கூறப்படும் பணம் மற்றும் நகைகளை உடனே திருப்பி செலுத்த வேண்டும் என்று பிரச்சனை செய்தார். பின்னர் வேறு வழியின்றி மனுதாரர் சிங்கப்பூர் சென்று எதிர்மனுதாரருடன் வாழ்வதற்கு 13.07.2019ம் தேதி இந்தியாவிலிருந்து கிளம்பி 14.07.2019ம் தேதி சிங்கப்பூர் சென்றார். அங்கு சென்று பார்த்த போது மனுதாரரின் 100 பவுன் நகைகள் மற்றும் ஆடைகள் இல்லை. மாறாக வேறு ஒரு பெண்ணின் ஆடைகள் இருந்தன. இது குறித்து எதிர்மனுதாரரிடம் கேட்ட போது 15.07.2019ம் தேதி சிங்கப்பூரிலிருந்து மனுதாரரை அழைத்து கொண்டு திருச்சி விமான நிலையத்தில் வந்து மனுதாரிடமிருந்து பாஸ்போர்ட்டை வாங்கி கொண்டு சற்று நேரத்தில் வருவதாக கூறி சென்று விட்டு இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக வராததால் மனுதாரரின் பெற்றோர் வீட்டில் தகவல் சொல்லி மனுதாரரை கூட்டி சென்றனர். தற்போது தான் எதிர்மனுதாரர் கவிதா என்ற பெண்ணுடன் கணவன் மனைவியாக வாழ்ந்து வருகிறார் என்பது தெரிய வந்தது.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.13 07:34:49 +0530

2(9) எதிர்மனுதார் நெருங்கிய உறவினரா மனுதாரரை திருமணம் செய்து கொண்டு மனைவி என்ற முறையில் கௌரவமாக வாழ்க்கையை கொடுக்காமல் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் கொடுமைகள் செய்து வந்துள்ளார். மனுதாரர் தனது அன்றாட தேவைகளுக்கும் உணவு, உடை, மருத்துவச் செலவு முதலான அடிப்படை தேவைகளை நிறைவேற்றி கொள்ள இயலாமல் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகியுள்ளார். எதிர்மனுதார் மனுதாரரின் கணவர் என்ற முறையில் பராமரிக்க கடமைப்பட்டுள்ளார்.

2(10) எதிர்மனுதார் சிங்கப்பூரில் SP.Muthiah & sons PTE Ltd என்ற நிறுவனத்தில் விற்பனை மேலராளராக பணிபுரிந்து மாதந்தோறும் ரூ.5,00,000/– வரை சம்பாதித்து வருகிறார். எதிர்மனுதாரருக்கு சிங்கப்பூரிலும், இந்தியாவிலும் சொந்தமாக வீடுகள் உள்ளன. எதிர்மனுதாரருக்கு மகிபாலன்பட்டியில் நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளன, அவற்றிலிருந்து ஆண்டுதோறும் ரூ.5,00,000/– வரை வருமானம் வருகிறது.

2(11) மனுதாரர் எதிர்மனுதாரருக்கு உணவு, உடை, மருத்துவம் முதலான அடிப்படை தேவைகளுக்கு மாதந்தோறும் தலா ரூ.1,00,000/– மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து ஜீவனாம்சமாக எதிர்மனுதார் செலுத்த வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>எதிர்மனுதாரர் எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு</u>:–**

3(1) எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் 26.02.2026 ம் தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

**<u>4. தீர்வு:</u>**

4(1). இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரருக்கு தலா ரூ.1,00,000/–ம் ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர் மாதம் தோறும் செலுத்த வேண்டுமா? இல்லையா? என்பதே ஆகும்.

4(2) இவ்வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.13 07:34:56 +0530

குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர் தரப்பில் கேட்கப்பட்டு, மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

4(3) .இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் மட்டும் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வகையில், அவர் தனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் தனது மனுவில் கூறப்பட்டுள்ள விவரங்களை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மனுதாரர் தரப்பில் மனுதாரர், எதிர்மனுதாரரின் மனைவி என்பதை நிரூபிக்கும் வகையில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4(4). எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் எதிர்மனுதாரரின் மனைவி இல்லை என்றோ, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றோ மறுத்துரைத்து எவ்வித விவரமும் தெரிவிக்கப்படவில்லை. மாறாக எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையேயான கணவன், மனைவி உறவுமுறை மனுதாரர் தரப்பில் தக்க சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

4(5). மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ–1 ஆவணமான திருமண அழைப்பிதழை பரிசீலிக்கையில் மகிபாலன்பட்டி, வள்ளியகம் என்ற கிராமத்தில் வசித்து வரும் குகன் என்பவரின் புதல்வன் ராஜ்குமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி எதிர்மனுதாரர் மகிபாலன்பட்டியில் வசித்து வந்தார் என்பது தெரிய வருகிறது. மேற்படி மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருடன் சிங்கப்பூரில் திருமணத்திற்கு பின் வசித்து வந்ததாக கூறியுள்ளார். ஆனால் அதற்கான ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.13 07:35:02 +0530

4(6). மனுதாரர் தனது மனுவில் மனுதாரர் வேறு வழியின்றி சிங்கப்பூர் சென்று எதிர்மனுதாரருடன் வாழ்வதற்கு 13.07.2019 ம் தேதி இந்தியாவிலிருந்து கிளம்பி 14.07.2019 ம் தேதி சிங்கப்பூர் சென்றார். அங்கு சென்று பார்த்த போது மனுதாரரின் 100 பவுன் நகைகள் மற்றும் ஆடைகள் இல்லை. மாறாக வேறு ஒரு பெண்ணின் ஆடைகள் இருந்தன. இது குறித்து எதிர்மனுதாரரிடம் கேட்ட போது 15.07.2019 ம் தேதி சிங்கப்பூரிலிருந்து மனுதாரரை அழைத்து கொண்டு திருச்சி விமான நிலையத்தில் வந்து மனுதாரிடமிருந்து பாஸ்போர்ட்டை வாங்கி கொண்டு சற்று நேரத்தில் வருவதாக கூறி சென்று விட்டு இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக வராததால் மனுதாரரின் பெற்றோர் வீட்டில் தகவல் சொல்லி மனுதாரரை கூட்டி சென்றனர் என்று கூறியுள்ளார். எனவே எதிர்மனுதாரர் எந்தவித காரணமுமின்றி மனுதாரரை திருச்சி விமான நிலையத்தில் விட்டு சென்றுள்ளார் என்பது தெரிய வருகிறது.

4(7) மேலும் மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரர் நெருங்கிய உறவினரான மனுதாரரை திருமணம் செய்து கொண்டு மனைவி என்ற முறையில் கௌரவமாக வாழ்க்கையை கொடுக்காமல் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் கொடுமைகள் செய்து வந்துள்ளாக கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதார்கள் தரப்பில் அதனை மறுத்துரைத்து எவ்வித ஆட்சேபனையும் செய்ய முன்வரவில்லை.

4(8) மனுதாரர் தனது மனுவில் மனுதாரர் தனது திருமணத்தின் போது 100 பவுனுக்கு மேல் தங்க நகைகள், 5 கிலோ வெள்ளி சாமான்கள் மற்றும் ரூபாய் பத்து லட்சம் மதிப்பிலான சீர்வரிசை சாமான்கள் ஆகியவைகள் மனுதாரருக்கு வழங்கப்பட்டு, திருமணத்திற்காக சுமார் ரூ.60,00,000/- வரை மனுதார் பெற்றோர்களால் செலவு செய்யப்பட்டது என்று கூறியுள்ளார். மேலும் மனுதாரர் சிங்கப்பூர் சென்று எதிர்மனுதாரருடன் வாழ்வதற்கு 13.07.2019 ம் தேதி இந்தியாவிலிருந்து கிளம்பி 14.07.2019 ம் தேதி சிங்கப்பூர் சென்று பார்த்த போது

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.13 07:35:12 +0530

மனுதாரரின் 100 பவுன் நகைகள் மற்றும் ஆடைகள் இல்லை என்று கூறியுள்ளார்.

4(9). மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரர் கவிதா என்பவருடன் சிங்கப்பூரில் குடும்பம் நடத்தி வருவதாக கூறியுள்ளார். எனவே எதிர்மனுதாரர் மனுதாரரை விட்டு எந்தவித காரணமுமின்றி தன்னிச்சையாக பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்பது தெரிய வருகிறது.

4(10). எதிர்மனுதாரர் சிங்கப்பூரில் SP.Muthiah & sons PTE Ltd என்ற நிறுவனத்தில் விற்பனை மேலராளராக பணிபுரிந்து மாதந்தோறும் ரூ.5,00,000/- வரை சம்பாதித்து வருகிறார் என்றும் எதிர்மனுதாரருக்கு சிங்கப்பூரிலும், இந்தியாவிலும் சொந்தமாக வீடுகள் உள்ளன. எதிர்மனுதாரருக்கு மகிபாலன்பட்டியில் நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளன, அவற்றிலிருந்து ஆண்டுதோறும் ரூ.5,00,000/- வரை வருமானம் வருகிறது என்றும் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மனைவி என்ற கௌரவமான வாழ்க்கையை தரவில்லை என்றும் உணவு, உடை மற்றும் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு எவ்வித வருமானமும் இல்லாமல் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி விவரங்களை மறுத்துரைக்கும் வகையில், மறுப்புரை தாக்கல் செய்யப்படவோ, எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவோ முன்வரவில்லை. எனவே மனுவில் கூறிய சங்கதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

4(11). எதிர்மனுதாரரின் வருமானத்தை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன் மனைவி என்பது மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மனுதாரரை பராமரிக்கவேண்டிய கடமையும், பொறுப்பும் எதிர்மனுதாரருக்கு உண்டு என்றே இந்நீதிமன்றம் காண்கின்றது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் அவரது வருமானம் எவ்வளவு என

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.13 07:35:19 +0530

இந்நீதிமன்றத்தில் முன்னிடப்படாத காரணத்தினால், எதிர்மனுதாரருக்கு மனுதாரரை பராமரிக்கும் அளவிற்கு வசதி வாய்ப்புள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

4(12). இவ்வழக்கில் மனுதாரர் தரப்பு வழக்குரைகள், ம.சா.1–ன் சாட்சியம், ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் மற்றும் மனுதாரர் தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டும், எதிர்மனுதாரர் நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து தோன்றாதரப்பினராக கருதப்பட்டுள்ள நிலையிலும், எதிர்மனுதாரரைப் பொறுத்து வழக்கு ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரருக்கு தனது வருமானத்தை நிரூபிக்கும் விதமாக Assests and libilities தாக்கல் செய்ய போதிய வாய்ப்பளித்தும் தாக்கல் செய்யாமல் இருந்த போதிலும், மனுதாரரை மனைவி என்ற முறையில் பராமரிக்கும் கடமை எதிர்மனுதாரருக்கு உள்ளது என்ற நிலையில், மனுதாரருக்கு எதிர்மனுதாரிடமிருந்து ஜீவனாம்சம் கிடைக்கத்தக்கது என்று நீதியின் நலன் கருதி இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**5. முடிவாக,**

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

2. மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் மாதந்தோறும், ஜீவனாம்சமாக ரூ.20,000/– கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி ஜீவனாம்ச தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5–ஆம் தேதிக்குள் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு நேரடியாகவோ அல்லது காசோலை மூலமாகவோ, வங்கி பரிவர்த்தனை மூலமாகவோ கொடுக்க வேண்டும் என்றும், மேலும் இம்மனுதாக்கல் செய்த தேதி முதல் மனு உத்தரவு தேதி வரையிலான ஜீவனாம்ச நிலுவை தொகையை மூன்று மாத காலத்திற்குள் மனுதாரரிடம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்று இதன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

*இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை*

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.03.13 07:35:29 +0530

*திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.*

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.13 07:35:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி:–**

| | |
|---|---|
| ம.சா.1 | விஜிதா |

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | திருமண அழைப்பிதழ் அசல் |
| ம.சா.ஆ.2 | – | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–** இல்லை.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.13 07:35:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

<u>குறிப்பு</u>:–

1) வழக்கின் முடிவு குறித்து தரப்பார்களுக்கு தெரிவிக்கப்பட்டது.
2) வழக்கின் எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3) உத்தரவு நகல் மனுதாரருக்கு வழங்கப்பட்டது.

/ உண்மை நகல் /

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.03.13 07:36:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.